தினகரன் 28-03-2018

## 18 முதல் 60 வயது வரை

# ஆரோக்கியமாக உள்ளவர்கள் ரத்ததானம் செய்யலாம்




கரூர் டிஎன்பிஎல் நிறுவனமும் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ரத்த வங்கியும் இணைந்து சமுதாயக்கூடத்தில் ரத்ததான முகாம் நடைபெற்றது.

### அதிகாரி அறிவுறுத்தல்

க.பரமத்தி, மார்ச்28: காகித நிறுவன சமுதாய கூடத்தில் டிஎன்பிஎல் சார்பில் நடந்த ரத்ததான முகாமில் பேசிய ரத்தவங்கி அலுவலர் 18 முதல் 60 வயதுவரை ஆரோக்கியமாக உள்ளவர்கள் ரத்ததானம் செய்யலாம் என கூறினார்.

டிஎன்பிஎல் காகித நிறுவனம் மற்றும் கரூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ரத்த வங்கியும் இணைந்து காகித நிறுவன சமுதாயக் கூடத்தில் ரத்ததான முகாம் நடத்தியது.

முகாம் தொடக்க விழாவிற்கு துணை பொது மேலாளர் (மனிதவளம்) சுரேஷ் வரவேற்றார். காகித ஆலை பொது மேலாளர் (மின்சாரம் மற்றும் கருவியியல்), பாலசுப்பிரமணியன் தலைமை வகித்தார்.

அரசு மருத்துவர் வேதிகா, மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை ரத்த வங்கி மருத்துவ அலுவலர் வசந்தி முன்னிலை வகித்தார். கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ரத்தவங்கி மருத்துவ அலுவலர் வசந்திபிரபாகரன் பேசியதாவது :

18வயது முதல் 60 வயது வரை ஆரோக்கியமாக உள்ளவர்கள் ரத்த தானம் செய்யலாம்.நம் ஒவ்வொருவரின் உடலிலும் 3 முதல் 5லிட்டர் ரத்தம் உள்ளது. ரத்ததானத்தின் போது 350மில்லி மட்டுமே எடுக்கப்படுகிறது. இதே அளவு ரத்தம் அடுத்த 24மணி நேரத்திற்குள் நமது உடலில் உற்பத்தியாகி விடும். ரத்த தானம் செய்பவரின் உடல் எடை குறைந்த பட்சம் 45 கிலோவிற்கு மேல் இருக்க வேண்டும். ஹீமோகுளோபின் அளவு 12.5 கிராமிற்கு மேல் இருக்க வேண்டும். ரத்த அழுத்தம் இயல்பாக இருப்பதுடன் ஆண்கள் 3 மாதத்திற்கு ஒரு முறையும், பெண்கள் 4மாதங்களுக்கு ஒரு முறையும் ரத்த தானம் செய்யலாம். சரியான இடைவெளியில் ரத்த தானம் செய்பவர்களுக்கு மாரடைப்பு நோய் தாக்குவதில்லை என பேசினார்.

காகித நிறுவன செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன் கலந்து கொண்டு ரத்த தான முகாமை தொடங்கி வைத்துபேசினார்.மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ரத்த வங்கி மருத்துவ அலுவலர் வசந்தி பிரபாகரன் தலைமையில் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை ரத்த வங்கியின் குழுவினர் கொடையாளர்களிடம் ரத்தம் சேகரித்தனர்.

இம்முகாமில் 190 ஆண்கள், 6 பெண்கள் என 196 நபர்கள் ரத்ததானம் வழங்கினர். முகாமில் ஆலை பணியாளர்கள், ஒப்பந்த பணியாளர்கள், தொழில் பழகுனர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் ரத்ததானம் செய்தனர்.